உடனடி வெளியீட்டுக்காக

**பரவுவதை நிறுத்துங்கள்**

***கோவிட் – 19 தொற்று பரவலுக்கு எதிராக தனி நபர் நடத்தைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான ஆற்றல் வாய்ந்த குறும்படத்தை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் வெளியிட்டிருக்கிறது***

ப்ராம்ப்ட்டன், ON (டிசம்பர் 17, 2020) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம், தான் தயாரித்த மூன்று நிமிட நேர தி ஸ்ப்ரெட் (*The Spread*) எனும் குறும்படமானது, ஒரு சக்திவாய்ந்த செய்தியைக் கொண்டுள்ளது; சிறிய மற்றும் அப்பாவித்தனமான செயல்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களை எவ்வாறு ஆழமாக பாதிக்கும் என்பதை எடுத்துக்காட்டுவதன் மூலம் பார்வையாளர்களிடையே உணர்ச்சிபூர்வமான செவிசாய்ப்பினைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நடத்தை மாற்றத்தை ஊக்குவிப்பதில் உணர்ச்சி ரீதியான ஒரு இணைப்பு முக்கியமானது; மேலும் அனைத்து குடியிருப்பாளர்களும் தங்களையும், தங்கள் அன்புக்குரியவர்களையும், சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்வதற்கான அன்றாட செயல்களில் விழிப்புடன் இருப்பதற்கான முயற்சியை இது ஏற்படுத்தும்.

## தி ஸ்ப்ரெட் (The Spread)

தி ஸ்ப்ரெட் (*The Spread*) குறும்படம் அன்னா என்னும் ப்ராம்ப்ட்டன் நகர இளம் பெண்ணைப் பற்றியது; இவள் தன்னையும் தன் குடும்பத்தினரையும் கோவிட்- 19 தொற்றுப்பரவலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான அனைத்து விஷயங்களையும் சரியாகச் செய்கிறாள் என்று நினைக்கிறாள். அனா அன்றாடம் தான் தொடர்பு கொண்டவர்களைக் கண்காணித்தபடியும், தொடர்புகளை மட்டுப்படுத்தியபடியும் இருந்து வரும்போது, அவளுடைய காதலன் ஜோர்டான் தனது நண்பர்களுடன் ஒரு விருந்தில் கலந்துகொண்டு தன்னையும், அனாவையும் அவளுடைய முழு குடும்பத்தையும் ஆபத்தில் ஆழ்த்துகிறான். உடல்நலம் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை தி ஸ்ப்ரெட் (*The Spread*) குறும்படம் குடியிருப்பாளர்களுக்கு நினைவூட்டுகிறது - மேலும் கவனக்குறைவு பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் கூறுகிறது.

## சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய நினைவூட்டல்கள்

மாகாணத்தின் அதிதீவிர ஊரடங்கு நிலையின் கீழ் உள்ள நகரங்களில் ஒன்றாக இருக்கும் ப்ராம்ப்ட்டன் நகரில், குடியிருப்புவாசிகள் தங்கள் முகக் கவசங்களை அணிந்துகொள்வது, உடல்

ரீதியான தூரத்தை கடைப்பிடிப்பது, நல்ல சுகாதாரத்தைப் பேணுதல் மற்றும் அவர்களின் அடுத்த வீட்டில் வசிப்பவர்களுடன் மட்டுமேயும் அத்தியாவசிய ஆதரவு அளிப்பவர்களுடனும் மட்டுமேயும் பழகுவது என்பது முன்பை விட இப்போது முக்கியமானதாகும்.

COVID-19 தொற்று பரவும் அபாயத்தைக் குறையுங்கள். உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்கள் அன்புக்குரியவர்களைப் பாதுகாத்திடுங்கள். நமது சமூகத்தைப் பாதுகாத்திடுங்கள்.

**லின்குகள்**

- தி ஸ்ப்ரெட் (*The Spread*) குறும்படத்தைப் பாருங்கள்
- கோவிட்-19 க்கு ப்ராம்ப்ட்டன் நகரின் செவிசாய்ப்பு (The City of Brampton's response to COVID-19)
- பீல் பகுதியில் கோவிட்-19 நோயாளிகள் (Cases of COVID-19 in Peel)
- மாகாணத்தின் அதி தீவிர ஊரடங்கு நிலையின் கீழாக பீல் பிராந்தியத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் (Health and safety measures in Peel Region under the Province's Grey-Lockdown Level)

**அறிஞர் கூற்றுக்கள்**

"வரவிருக்கும் விடுமுறை நாட்களில், ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் தங்களுடைய மற்றும், தங்கள் அன்புக்குரியவர்கள் மற்றும் நமது சமூகத்தின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் முதலிடத்தில் வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்; மேலும் தி ஸ்ப்ரெட் (*The Spread*) குறும்படத்தில் சொல்லப்படும் செய்தியைக் கவனியுங்கள். நமது செயல்களே முக்கியம். COVID-19 தொற்று பரவல் நமது சமூகத்தில் நம்பமுடியாத அளவிற்கு ஆபத்தான அச்சுறுத்தலாக உள்ளது, மேலும் இது ப்ராம்ப்ட்டனைப் பாதுகாப்பாக வைத்திருக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வைக்கும். தயவுசெய்து உங்கள் முகக்கவசங்களை அணிந்துகொண்டும், உடல் ரீதியான தூரத்தை கடைப்பிடித்தபடியும் இருங்கள்; உங்கள் அடுத்த வீட்டைத் தாண்டிய எவருடனும் ஒன்று சேர வேண்டாம். மனத்தால் நாம் ஒன்றாக இருந்தால்தான், COVID-19 பரவுவதை நிறுத்தலாம். "

– *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

" கோவிட்-19 தொற்று நமது சமூகத்தில் தொடர்ந்து பரவி வருகிறது, மேலும் இது நமது குடியிருப்பாளர்களையும் வணிகங்களையும் பெரிதும் பாதிக்கிறது. இந்த கடினமான நேரத்தில் ப்ராம்ப்ட்டனை மீட்டெடுப்பதில் நகர நிர்வாகம் உறுதியுடன் உள்ளது, ஆனால் அனைத்து குடியிருப்பாளர்களின் செயல்களிலும் இது பிரதிபலிக்க வேண்டும் மற்றும் வைரஸ் பரவுவதைத் தடுக்க

சுகாதார மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ஒரு சமூகமாக செயல்படுவதன்மூலமாக, பரவுவதை நாம் தடுப்போம். ”

– டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca